# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள். 01.04.2026

## முன்னிலை

## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். CP 5513/F/2024**

திரு.மு.விக்னேஷ், .. புகார்தாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்
(தலைமையிடம்), .. பொது அதிகார அமைப்பு
மாவட்ட காவல் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606 202.

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (01.04.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு.மு.விக்னேஷ், அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திரு.T.சரவணன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (தலைமையிடம்), கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 04.09.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், “கடந்த 01.07.2023 தேதியிட்டு திருக்கோவிலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் CSR No.208/2023 எண்ணிட்டு பதிவு செய்யப்பட்ட மனுதாரர் சந்தியா என்பவரின் புகார் மனு மற்றும் புகார் மனு ஏற்பு இரசீது (CSR) ஆகிய இரண்டின் சான்றிட்ட நகல்கள்” என்பன போன்ற தகவல்களை 4 இனங்களில் வழங்கக் கோரி பொதுத் தகவல் அலுவலர், காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகம், திருக்கோவிலூர் வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. அம்மனுவைப் பெற்ற பொதுத் தகவல் அலுவலர், கூடுதல் காவல் கண்காணிப்பாளர், தலைமையிடம், கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்கள் ந.க.எண்.547/RTI/ADSP/KLK/2024, நாள் 09.10.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு இனம் வாரியாக தகவல்கள் வழங்கியுள்ளார். மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து முழுமையான தகவல்கள் வழங்கவில்லை என 18.10.2024 தேதியிட்டு பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கு மனு செய்துள்ளார். அம்மேல்முறையீட்டு மனுவைப் பெற்ற மேல்முறையீட்டு அலுவலர், காவல் கண்காணிப்பாளர், கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்கள் ந.க.எண்.652/RTI/FA-SP/KLK/2024, நாள் 11.11.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கியுள்ளார். அதன் பின்னர் மனுதாரர் மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்தும் முழுமையான தகவல்கள் பெறப்படாததால் மனுதாரர், 18.11.2024 நாளிட்ட பிரிவு **18(1)**-ன் கீழ் புகார் மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். இப்புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 01.04.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்து பொதுத் தகவல் அலுவலரால் ந.க.எண்.547/RTI/ADSP/KLK/2024, நாள் 09.10.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக இனம் வாரியாக தகவல்களும், மேல்முறையீட்டு அலுவலரால் ந.க.எண்.652/RTI/FA-SP/KLK/2024, நாள் 11.11.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அதன் நகலை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் தனக்கு பொது அதிகார அமைப்பால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு வழங்கப்பட்ட தகவல்கள் முழுமையான தகவல்களாக வழங்கப்படவில்லை என்று தெரிவித்து தனக்கு உரிய தகவல்களை பெற்றுத் தருமாறு ஆணையத்திடம் முறையிட்டார்.

6. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் கோரிய தகவல்கள், அவருக்கு பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்ட தகவல்கள் ஆகியவற்றை ஆணையம் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு உரிய, சரியான தகவல்கள் ந.க.எண்.547/RTI/ADSP/KLK/2024, நாள் 09.10.2024 மற்றும் ந.க.எண்.652/RTI/FA-SP/KLK/2024, நாள் 11.11.2024 தேதியிட்ட கடிதங்களின் வாயிலாக பொது அதிகார அமைப்பால் முழுமையான தகவல்கள் வழங்கியுள்ளதை இவ்வாணையம் உறுதி செய்து இப்புகார் மனுவின் மீதான விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 5513/F/2024</u>**

**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (தலைமையிடம்),
மாவட்ட காவல் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606 202.

**<u>மனுதாரர்</u>**

திரு.மு.விக்னேஷ்,
எண்.1/76, மாதா கோவில் தெரு,
கோட்ட மருதூர் கிராமம் (ம) அஞ்சல்,
கண்டாச்சிபுரம் வட்டம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-605 756.

Copy to: File NS/PA-